DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-29/2020

Prosecution witness – PW 2

| | | |
|---|---|---|
| Name | : திரு.ஹக்குல்லா | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

07.03.2026 – 11.25 PM

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் வாலிநோக்கம் கிராமத்தில் குடியிருந்து மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் பட்டியல் சாட்சி 3 ஐ எனக்கு தெரியும்.

2. கடந்த 13.01.2020ம் தேதியன்று நான் எனது கடையில் இருந்த போது இரவு 08.30 மணியளவில் எனது சித்தப்பா மகனான எதிரி முகமது முஜ்ஜாமின் என்னிடம் வந்து அவர் செல்போனில் வைத்திருந்த வாய்ஸ் ரெக்கார்டிங் (குரல் பதிவு) ஒன்றை இயக்கி காட்டினார். அதில் யாரோ ஒரு நபர் வாலிநோக்கம் ஊராட்சி மன்ற தலைவர் வீட்டில் ஜெய்புன் நிஷா இருந்ததாகவும், அவரை பின்னர் பிடித்ததாகவும், அந்த குரல் பதிவில் தவறான கருத்துடன் கூடிய குரல் பதிவுகளை என்னிடம் இயக்கி காண்பித்தார். மேலும் வாலிநோக்கம் ஜமாத் தலைவர் மேற்படி தவறு நடந்த இடங்களில் எல்லாம் சென்று பஞ்சாயத்து பேசுகிறார், அவருக்கு இது தான் வேலையா, நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று என்னிடம் சொன்னார்.

3. அதன் பிறகு மனுதாரர் ஜெய்புன் நிஷாவிற்கும் எதிரிக்குமிடையே பிரச்சனை நடந்தது. நான் அதை நேரில் பார்க்கவில்லை. போலீசார் விசாரித்தார்கள்

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எந்த தேதியில் எப்போது விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வரசொல்லி 15.01.2020ந் தேதி விசாரித்தார்கள். அதற்கு பின்னிட்டு என்னை விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கின் எதிரி புகார்தாரரை தரக்குறைவாக பேசவில்லை என்றால் சரிதான். 13.01.2020ம் தேதி இரவு 08.00 மணிக்கு எதிரி வந்து என்னிடம் ஒரு வாய்ஸ் ரெக்கார்டு போட்ட விவரத்தை என்னிடம் சொல்ல முயன்றார் என்றால் சரியல்ல. ஜமாத் தலைவருக்கு இது தான் வேலையா கேட்டுச்சொல்லுங்கள் என்று எதிரி என்னிடம் சொன்னார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் ஜெய்புன் நிஷா எனக்கு துாரத்து உறவினர் என்றால் சரிதான்.

அந்த சமயத்தில் நடந்த ஊராட்சி மன்ற தேர்தலில் பீர்முகமதுவும், எதிரியும் போட்டியிட்டார்கள் என்றால் சரிதான். அந்த தேர்தலில் பீர்முகமது வெற்றிபெற்றுவிட்டார் என்றால் சரிதான். இந்த தேர்தலில் பீர்முகமதுவுக்கு ஆதரவாக ஜெய்புன் நிஷா வேலை பார்த்தார் என்றால் சரிதான். பீர்முகமதுவை எதிர்த்து எதிரி போட்டியிட்டார் என்ற காரணத்திற்காக ஊராட்சி மன்ற தலைவர் பீர்முகமதுவின் துாண்டுதலின் பேரில் அ.சா.1 பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 எனது துாரத்து உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 18:31:14 +0530